## சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களிலிருந்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்காகாய்விற்கான சான்றுகள் இன்மை

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீளச்செலுத்த வேண்டிய கணக்கு மீதியான ரூபா 17,136,884 தொகைக்கான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 47,599,048 மிகையாக இருந்ததுடன் இதனோடு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 57,693,497 ஆனமையால் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 10,094,449 தொகையான குறைவு அவதானிக்கப்பட்டது. எரிபொருள் செலவினம் முன்னைய ஆண்டை விட ரூபா 15,704,110 தொகையினால் அதிகரித்தமை அம்மிகையின் அக்குறைவிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

சுங்க வரி மோசடிகள், சட்டவிரோதமான இறக்குமதிகள் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு பிரமாணங்களை மீறல் போன்ற சட்டவிரோதமான செயற்பாடுகள் சுங்க உத்தியோகத்தர்களினால் கண்டுபிடிக்கப்படும் சந்தர்ப்பங்களில் அறவிடப்படும் அரசாங்க வரி வருமானம், விதிக்கப்படும் தண்டனைத் தொகை, அரசுடமையாக்கப்பட்ட பணம் மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்களை விற்றமையினால் கிடைக்கப்பெற்ற பணம் முதலியவற்றில் இருந்து 50 சதவீதமான பங்கு உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் வெகுமதியாக வழங்குவதற்காக இந்நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது.

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டு மற்றும் முன்னைய ஆறு ஆண்டுகளுக்கு உரித்தான நிதியத்தின் வருமானம், செலவினம் மற்றும் தேறிய செயற்பாட்டு விளைவுகள் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | வருமானம் | செலவினம் | | | | மொத்த செலவினம் | மிகை/ (பற்றாக்குறை) |
|---|---|---|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர் களுக்குக் கொடுப்பனவு | ஒற்றர்களுக்குக் கொடுப்பனவு | பிடித்து வைத்தல் வரி/ உள்நாட்டு இறைவரி திணை. | ஏனையவை | | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2006 | 594,567,776 | 446,300,470 | 44,183,900 | 6,443,292 | 64,578,911 | 561,506,573 | 33,061,203 |
| 2007 | 1,171,679,881 | 810,441,327 | 72,757,307 | 105,428,768 | 111,382,303 | 1,100,009,705 | 71,670,176 |
| 2008 | 895,773,758 | 678,463,260 | 55,144,035 | 8,693,891 | 119,792,064 | 862,093,250 | 33,680,508 |
| 2009 | 968,064,233 | 716,618,818 | 84,506,905 | 9,132,859 | 113,226,650 | 923,485,232 | 44,579,001 |
| 2010 | 902,474,770 | 687,504,664 | 37,556,075 | 9,328,789 | 102,357,464 | 836,746,992 | 65,727,778 |
| 2011 | 873,979,003 | 574,047,509 | 106,080,370 | 33,927,845 | 102,229,782 | 816,285,506 | 57,693,497 |
| 2012 | 973,210,594 | 694,361,096 | 128,208,276 | 42,779,776 | 60,262,398 | 925,611,546 | 47,599,048 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சுங்க உத்தியோ கத்தர்களது வெகுமதி நிதியத்தின் வருமானம் ரூபா 99,231,591 ஆல் அதாவது 11 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது வெகுமதியாக உத்தியோகத்தர்களுக்கு ரூபா 694,361,096 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அது ரூபா 574,047,509 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது உத்தியோகத்தர்களுக்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 120,313,587 இனால் அதாவது 21 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அவ்வாறே 2012 ஆம் ஆண்டிற்காக கணக்குப் பிரிவிற்குக் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செலுத்தப்பட்டிராத ரூபா 230,762,533 தொகையான 60 வெகுமதிப் பட்டியல்கள் காணப்பட்டதுடன் கொள்கைத் திட்டமிடல் பிரிவில் ஒன்றிணைந்த கொடுப்பனவுகளுக்குரிய ரூபா 1,606,592 தொகையும் பட்டியலில் இருந்தது.

(இ) சுங்க கட்டளைச்சட்டத்தின் 153(2) (ஆ) ஆம் பிரிவின் பிரகாரம், வழங்கப்பட்டுள்ள திணைக்களக் கட்டளை இல. 118 இன் மூலம் உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் இடையே வெகுமதியைப் பகிரும் தீர்மான முறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 725 மில்லியன், ரூபா 680 மில்லியன் மற்றும் ரூபா 822 மில்லியன் என்ற வகையில் கூட்டுத்தொகை ரூபா 2,227 மில்லியன் தொகை உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இதில் ரூபா 1,962 மில்லியன் அல்லது 88 சதவீதம் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வெகுமதித் தொகையாக இருந்ததுடன் வழங்கப்படக்கூடிய வெகுமதித் தொகை தொடர்பான ஆகக்கூடிய எல்லையொன்று விதிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் சில உத்தியோகத்தர்களுக்காக ஒரு தடவையில் ரூபா 90 மில்லியனையும் மிகைத்து வெகுமதி செலுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

**(ஈ) நஞ்சு போதைப்பொருள் கணக்கு**

குறிப்பான நியதிகள் இனங்காணப்படாமல் சுங்க வெகுமதி நிதியத்திலிருந்து ஒரு பகுதி நச்சுப் போதைப்பொருள் நிதியத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் மீதி ரூபா 57,990,812 ஆக இருந்தது. மீளாய்வாண்டில் இந்நிதியத்திலிருந்து ரூபா 1,795,000 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(உ) மீளளிப்பு வைப்பு வெகுமதிக் கணக்கு**

இக்கணக்கில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 17,136,884 ஆக இருந்தது. அவ்வப்போது திணைக்களத்தால் வழங்கப்பட்ட வெகுமதிப் பட்டியலில் இருந்து உரிய வெகுமதித் தொகையை பெற்றுக்கொள்ளாத உத்தியோகத்தர்களின் பணம் இக்கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. அவ்வாறு அந்த உத்தியோகத்தர்களுக்குரிய பணத்தை மீளக்கோரப்படும் சந்தர்ப்பத்தின் போது உரிய கொடுப்பனவு இக்கணக்கிற்கு வரவு வைக்கப்படும். எவ்வாறாயினும் மீள் வைப்புக்கள் வெகுமதி நிதியக் கணக்கின் மீதி பல வருட காலமாக திரண்டு முன்கொண்டுவரப்பட்ட மீதியாக அவதானிக்கப்பட்டதுடன் அந்த முன்கொண்டுவரப்பட்ட மீள் வைப்புக்கள் வெகுமதி நிதியங்களிற்குரிய நீண்ட காலமாக தீர்க்கப்படாதவைக்காக முறையான படிமுறைகள் எடுக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்படுகின்ற வெகுமதி நிதியத்திற்காக உழைக்கும் போது செலுத்தும் வரி கழிக்கும் போது இலங்கை சுங்கத்தினால் உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் அறிவுரைகள் கவனத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்படுகின்ற வெகுமதிப் பணம் ஒரே தடவையில் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த போதிலும் சில சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்படுகின்ற கொடுப்பனவுகள் திரட்டப்பட்டு இறுதியாக அறவிட வேண்டிய வரிக் கணப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பல்வேறு

சந்தர்ப்பங்களில் செலுத்தப்படுகின்ற வெகுமதி நிதிக்காக தனித்தனியாக உழைக்கும் போதான வரி கணிக்கப்பட்டு அதற்குரிய பங்கு மாத்திரம் அறவிடப்பட்ட காரணத்தினால் பாரியளவில் அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய வரி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. பல்வேறு படிகளைப் பெறுகின்ற சுங்க உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய வரித்தொகையை சரியாக கணிப்பதற்கான வேலைத்திட்டமொன்று ஈடுபடுத்தப்படாமை சர்ச்சைக்குரிய விடயமாகும். வெகுமதிக் கொடுப்பனவு தொடர்பான கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணப்பீடுகளின் பிரகாரம் 234 உத்தியோகத்தர்களிடமிருந்து மாத்திரம் 2012/2013 ஆம் ஆண்டின் போது அவ்வாறு குறைவாக அறவிடப்பட்ட உழைக்கும் போதே செலுத்தும் வரியின் அளவு அண்ணளவாக ரூபா 4,823,846 ஆக இருந்தது.

(ஆ) 1988 இன் 83 ஆம் இலக்க சுங்க (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 153(2) ஆம் பிரிவின் பிரகாரம் தண்டனை வருமானத்தில் ஏற்க வேண்டிய சகல செலவினம் கழிக்கப்பட்டதை அடுத்து மிகுதித் தொகையில் 50 சதவீதம் வெகுமதி நிதியத்திற்கு ஒதுக்கப்பட்டு உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் இடையே வெகுமதியாக பகிர்ந்தளிக்கக் கூடியவகையில் பிரமாணங்கள் வகுக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சகல உத்தியோகத்தர்களுக்கும் அக்காலத்திற்காக சுங்க மேலதிக நேரக் கொடுப்பனவு நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்த மேலதிக நேரக் கொடுப்பனவு இவ்வாறு தண்டப்பண வருமானத்தில் இருந்து கழிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாது மேலதிக நேரக் கொடுப்பனவை நிதியத்தின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே புலனாய்வு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட மேலதிக நேரத்திற்கான கிரயம் தொடர்பான வேறாக அறிக்கை பேணப்பட்டிராமையால் புலனாய்வு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்த மேலதிக நேரக் கிரயத்தினை கணிப்பிட முடியாதிருந்தது.

(இ) தற்போது காணப்படுகின்ற சுங்க வெகுமதித் திட்டத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு சுங்க மோசடிகளுக்கு உள்ளாகின்ற தரப்பினருக்கு விதிக்கப்படுகின்ற தண்டப்பணத்தில் மாத்திரமல்லாமல் அத்தரப்பினர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிடவேண்டிய

பணத்திலும் ஐம்பது சதவீதப் (50%) பகுதியையும் உள்ளடங்கும் வகையிலானதால் அரசாங்க வருமானத்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய பங்களிப்பு தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினர்கள் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஈ) விசேட சுங்கப் புலனாய்வுகளின்றி பல்வேறு தரப்பினர்களிடமிருந்தும் அறவிடப்பட்ட வரி வருமானம் மற்றும் தண்டப் பணங்களிலிருந்து சுங்க உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிகளைச் செலுத்திய சந்தர்ப்பங்கள் அனேகமாகக் காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவ்வப்போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. உதாரணமாக கார்னட் (Carnet) செயற்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட 02 வாகனங்கள் மீள ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக அந்த வாகனங்களின் உரிமை இறக்குமதி செய்த தரப்பினருக்குக் கையளிக்கும் போது அறவிடப்பட்ட ரூபா 7,929,693 பெறுமதியில் ரூபா 3,964,847 தொகையானது உத்தியோகத்தர்களுக்கு நன்கொடையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) குறிப்பான நியதிகள் இனங்காணப்படாமல் வெகுமதி நிதியத்திலிருந்து ஒரு பகுதி எரிபொருள் நிதியத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இக் கணக்கின் மீதி முறையே ரூபா 182,653,578 தொகையும் ரூபா 191,881,945 தொகையுமாக இருந்தது. அவ்வாறே முன்னைய வருடங்களைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் சுங்கத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் எரிபொருள் செலவினங்களுக்காக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 25,000,000 தொகையான நிதி ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக இக்கணக்கின் மூலமும் ரூபா 18,577,016 தொகை எரிபொருளுக்காக செலவிடப்பட்டிருந்தது. இதற்காக பெற்றுக்கொண்ட முறையான அங்கீகாரம் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் மீளாய்வாண்டின் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் எரிபொருள் செலவினங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 25,000,000 தொகையான நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 8,019,349 தொகை உத்தியோகத்தர்களுக்கான படிகளைச் செலுத்துவதற்கான செலவின விடயத்திற்கு மாற்றியிருக்கும் போது திணைக்களத்தின் எரிபொருள் செலவினங்களுக்காக இவ்வாறு பாரிய

தொகையை எரிபொருள் நிதியத்தால் ஏற்கப்படுவது கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினத்திற்கிடையேயும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(ஆ) கணக்கீடு

(ஆ) வெகுமதிப் பண பகிர்வும் செலவினக் கட்டுப்பாடும்